# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029165

1. District : திருப்பூர் மாவட்டம் PS: ஊ.த.க பிரிவு காவல்நிலையம் Year: 2019 ஆண்டு FIR No.: 2/2019/AC/TPR மு.த.அ. எண் Date: 01.03.2019 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption [Amendment] Act 2018 Sections பிரிவுகள்: 7.
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 26.02.2019 at 11.00 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.03.2019 Time : நேரம் 06.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.03.2019 G.D. Vol - I Time : நேரம் 06.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமான புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 60 km, தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், வடுகபாளையம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. செல்வராஜ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தங்கவேல்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32 yrs. (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி க.எண். 6/407-1, ஆலமரத்தார் பிரிவு, சோமவாரபட்டி, உடுமலை தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ஆனந்தகுமார், கிராம நிர்வாக அலுவலர், வடுகபாளையம் கிராமம், உடுமலை தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. தேசைய்யா பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..................—.............. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 01.03.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. தேசைய்யா.
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.ந.க. பிரிவு, திருப்பூர்

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2019/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 01.03.2019-ம் தேதி 06.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.T.செல்வராஜ், த/பெ. தங்கவேல், 6/407-1, ஆலமரத்தூர் பிரிவு, சோமவாரப்பட்டி, உடுமலை தாலூக்கா, திருப்பூர் மாவட்டம் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு; அனுப்புநர்: T.செல்வராஜ், த/பெ தங்கவேல், 6/407-1, ஆலமரத்தூர் பிரிவு, சோமவாரபட்டி, உடுமலைபேட்டை தாலூக்கா, திருப்பூர் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். அய்யா, நான் உடுமலை தாலூக்கா சோமவாரபட்டியில் குடும்பத்துடன் குடியிருக்கிறேன். நான் BE(MECHANICAL) படித்து முடித்து தற்போது விவசாயம் செய்து வருகின்றேன். நான் உடுமலை கங்காரமடக்கு கிராமத்தை சேர்ந்த திருமலைசாமி என்பவரின் ஒரே மகள் மாலதி என்பவரை கடந்த 2014-ல் திருமணம் செய்தேன். எனக்கு 31/2 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. என் மாமனார் திருமலைசாமி என்பவருக்கு உடுமலை வடுகபாளையம் கிராமத்தில் ஆவண எண்.4611/1998-ன் படி க.ச.எண்.191/1-ல் 2 ஏக்கர் நிலமும், க.ச.எண்.191/2-ல் 2 ஏக்கர் நிலமும், ஆவண் எண்.4612/1998-ன் படி க.ச.எண். க.ச.எண்.192/10-ல் 82 செண்ட்டும் ஆக மொத்தம் 4.82 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. எனது மாமனாருக்கு மூட்டு வலி ஏற்பட்டு இரண்டு கால்களும் சிறிது வலைந்திருக்கும். எனது மாமனார் திருமலைசாமி அவர்கள் சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம் பெற சிறு விவசாயி சான்று கோரி கடந்த 08.02.2019-ம் தேதியன்று பெதப்பம்பட்டியில் உள்ள இ-சேவை மையத்தில் ஆன்லைன் மூலம் சம்பந்தபட்ட ஆவணங்களுடன் விண்ணபித்தார். அதன் பிறகு 15.02.2019-ம் தேதியன்று என் மாமனார் மேற்படி சான்று பெறுவது சம்பந்தமாக வடுகபாளையம் கிராம நிர்வாக அலுவலரை அவரது அலுவலகத்திற்க்கு சென்று ஆவணங்களை காண்பித்து வந்தார். பிறகு 26.02.2019-ம் தேதியன்று காலை என் மாமனார் என்னிடம் வந்து மேற்படி சிறு விவசாயி சான்று கோரி விண்ணபித்த தகவலை

என்னிடம் சொல்லி " எனக்கு மூட்டுவலி அதிகமாக இருப்பதால் வடுகபாளையம் VAO அலுவலகத்திற்கு என்னால் சான்றிதழ் பெறவது சம்பந்தமாக அடிக்கடி சென்றுவரமுடியாது அதனால் நீயும் என்னுடன் VAO அலுவலகத்திற்கு வா. நான் அவரிடம் உன்னை அறிமுகம் செய்துவைக்கிறேன் சான்றிதழை பெறுவது சம்பந்தமான வேலையை நீயே பார்த்துக்கொள்" என்று கூறி என்னை வடுகபாளையம் VAO அலுவலகத்திற்கு அன்று காலை சுமார் 11 மணியளவில் அழைத்து சென்றார். நானும் என் மாமனார் திருமலைசாமியும் வடுகபாளையம் VAO அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த VAO திரு.ஆனந்தகுமார் என்பவரை சந்தித்தோம். என் மாமனார் அவர் கொண்டுவந்திருந்த ஆவணங்களை VAO-விடம் காண்பித்த போது அவர் அதை வாங்கி பரிசீலனை செய்தார். அப்போது என் மாமனார் VAO-விடம் அருகில் இருந்த என்னை காண்பித்து இவர் எனது ஒரே மருமகன் எனக்கு மூட்டுவலி அதிகமாக இருப்பதால் எனது சிறுவிவசாயி சான்று பெறுவது சம்பந்தமாக இனி மேல் என் மருமகன் செல்வராஜ் தான் வருவார். என்னால் வர முடியாது என்று கூறியதற்கு VAO பரவாயில்லை நீங்கள் வரவேண்டிய அவசியம் இல்லை உங்கள் மருமகன் வந்தால் போதும் என்றார். பிறகு என் மாமனார் கால் முட்டி வலிப்பதாக சொன்னதால் அவரை VAO அலுவலகத்திற்கு வெளியே வந்து உட்கார வைத்துவிட்டு நான் மட்டும் மீண்டும் VAO அலுவலகத்திற்கு சென்று VAO ஆனந்தகுமாரை சந்தித்தேன். அப்போது அவர் ஆவணங்களில் உள்ள விபரங்களை மீண்டும் என்னிடம் கேட்டு தெளிவுபடுத்திகொண்டார். நான் சான்றிதழ் எப்போது கிடைக்கும் என கேட்டதற்கு VAOஅவர்கள் எனக்கு தனியாக ரூ.2,500/- கொடுத்தால் நான் பரிந்துரை செய்து சிறு விவசாயி சான்றிதழ் சீக்கிரம் கிடைக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருவேன் இல்லை என்றால் எதாவது காரணம் காட்டி கிடப்பில் போட்டுவிடுவேன் என்று சொன்னார். நான் பிறகு வீட்டிற்கு வந்து என் மாமனாரிடம் விபரத்தை கூறினேன். அவர் லஞ்சமாக பணம் எதுவும் கொடுக்க வேண்டாம் என கூறினார். எனக்கும் லஞ்சம் கொடுத்து என் மாமனாரின் பெயரில் சிறு விவசாயி சான்று பெற விருப்பமில்லை. அதனால் என் மாமனார் திருமலைசாமி பெயரில் சிறு விவசாயி சான்றிதழ் பெற என்னிடம் லஞ்சமாக ரூ.2,500/- கேட்கும் உடுமலை வட்டம், வடுகபாளையம் VAO ஆனந்தகுமார் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு இன்று 01.03.2019ம் தேதி புகார் தருகிறேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இப்படிக்கு, Sd/- xxxx (T.செல்வராஜ்). Sir, Received the above said complaint on 01/03/19 at 06.30

hrs. The genuineness of the compliant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused also verified through sources and found to be bad. Hence, I registered a case in Tiruppur V&AC Cr.No.2/2019/AC/TPR u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 at 07.30 hrs today on 01.03.2019 and took up for investigation. Sd/- xxxx, (R.Kousalya), Inspr, V&AC,TPR, 1/3/19.

Original FIR along with original written complaint of Tr.T.Selvaraj, S/o.Thangavel, 6/407-1, Alamarathupirivu, Somavarapatti, Udumalpet Taluk, Tiruppur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a Copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

R. Ka Inspr V&AC TPR 1/3/19

(R.Kousalya)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.